**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 01.07.2025**
**OS. No. 186/2021**
**வழக்கு சாட்சி PW.2–நஞ்சுண்டன் , த/பெ.அப்பையா செட்டியார்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. நான் அசல் ஆதார் அட்டையை கொண்டுவந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன். வாதியும், நானும் காமராஜர் தெருவில் தான் குடியிருக்கிறோம். பழனிவேல் செட்டி தெரு ஒன்று உள்ளதா என்றால் உள்ளது. வாதி பழனிவேல் செட்டி தெருவில் வசித்து வருகிறார் என்று வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் காமராஜர் தெருவின் பழைய பெயர் தான் பழனிவேல் செட்டி தெரு ஆகும். காமராஜர் தெருவும், பழனிவேல் செட்டி தெருவும் வெவ்வேறு என்றால் சரியல்ல. வாதி கேசவராஜ் எனக்கு நண்பர் ஆவார். அவருக்கும், எனக்கும் சுமார் 25 வருடங்களாக பழக்கம்.

2) வாதியும், 1ம் பிரதிவாதியின் கணவரும் சேர்ந்து கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் எனக்கு தெரியவில்லை. நான் என் நிரூபண வாக்குமூலத்தில் அந்த சொத்திலுள்ள வீட்டின் மேல்தளம் வாதியின் அண்ணன் சண்முகத்திற்கும், கீழ்தளம் வாதிக்கும் ஒதுக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதியும், நானும் ஒரே தொழில்தான் செய்து வருகிறோம் என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், குடியிருக்கும் வீட்டை காலி செய்து கொடுக்கும் படி பிரதிவாதி ஒருமுறை கேட்டார், அதற்கு பஞ்சாயத்து நடைபெற்று வாதி சிறிது கால அவகாசம் கோரினார். அது சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

3) வாதிக்கும், 1ம் பிரதிவாதியின் கணவரான சண்முகத்திற்கும் பாத்தியப்பட்ட வீடு தான் தாவா சொத்து என்றால் சரிதான். 2012ல் பாகபிரிவினை பத்திரத்தில் நான் சாட்சி

கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. காலி இடம் சம்மந்தமாக வாதி, 1ம் பிரதிவாதியின் கணவரான சண்முகத்திடம் எந்த மறுபயனும் பெறவில்லை என்று நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 6ல் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. ரூ.4,25,000/- வாங்கிக்கொண்டு தான் காலி இடத்தை 1ம் பிரதிவாதியின் கணவரான சண்முகத்திற்கு வாதி எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த விவரங்கள் விடுதலை பத்திரத்திலேயே சொல்லப்பட்டுள்ளது என்றும், நான் இல்லை என்று வாதிக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி 1ம் பிரதிவாதியின் கணவரான சண்முகத்திற்கு மருத்துவ உதவி போன்ற சவரச்சனைகள் செய்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

4) 1ம் பிரதிவாதி எங்கு குடியுள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை, அவரது பிள்ளைகள் கோயம்புத்தூர் மற்றும் பெங்களூரில் உள்ளனர். அங்கு தான் இருக்கலாம். எனக்கு வாதியை பற்றி மட்டும் தான் தெரியும் என்றும், தாவா சொத்து சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றும், நான் வாதி, பிரதிவாதி இருவரையும் தெரியும் என்று வழக்கில் பொய்யாக சொல்லியுள்ளேன் எ ன்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வாதியை வீட்டை விட்டு காலி செய்யுமாறு பிரச்சனை செய்ததாக வழக்கிற்காகவும், வாதிக்கு ஆதரவாகவும் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிக்கும், 1ம் பிரதிவாதியின் கணவரான இறந்துபோன சண்முகத்திற்கும் சரிபாதி உரிமை உள்ளது என்றால் சரிதான்.

5) 1ம் பிரதிவாதியின் கணவரான சண்முகம் ஒருபோது வாதிக்கு தாவா வீட்டை கொடுப்பதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பஞ்சாயத்து எதுவும் நடைபெறவில்லை என்றும், தாவா சொத்து சம்மந்தமாக விடுதலை பத்திரம் எழுதிக்கொடுப்பதாகவும் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, பஞ்சாயத்து மயில்சாமி என்பவர் முன்னிலையில் நடந்தது. மயில்சாமி தான் பஞ்சாயத்து நடத்தி வைத்தார் என்று என் நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றும், தற்போது புதியதாக ஒரு சங்கதியை சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காமராஜர் தெருவில் வசித்து வருகிறேன் என்றும், தாவா வீடு பழனிவேல் செட்டி தெருவில் உள்ளது என்றும், தாவா சொத்து பற்றி எனக்கு எதுவும்

தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சயிம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் என் சாட்சியத்தை சட்டப்படி ஏற்க இயலாது என்றால் சரியல்ல.

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.